1126

Regd. No. M. 1630. NOVEMBER. 1923.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷூல் மஹறிபா என்னும்

# ஞான சூரியன்

இது ஒரு நிகரில்லாத இனிய மாத சஞ்சிகை.

# GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 2.] ருத்ரோற்காரி௵ கார்த்திகை௴ 1உ 1923௵ நவம்பர்௴ 16உ [இதழ் 8.

Vol. II. No. 8

பொருளடக்கம்.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள்வணக்கம் | 169 |
| அடியார்நிந்தை—மணிமுத்துநாயகம் | 170 |
| அடியாரிலக்கணம்—ஞானக்களஞ்சியம் | 174 |
| சங்கீதம்—மணிமுத்துநாயகம் | 179 |
| சீடரிலக்கணம்—வேதாந்த பாஸ்கரன் | 184 |
| நரிக்குக்கோண்டாட்டம்—காரைச்சிவனடியார் | 190 |
| விசேஷக்குறிப்பு—அன்பன் | 192 |

இப் பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

# "ஞான சூரியன்"

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ. 1—8—0 |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ. 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ. 0—3—0 |

மாதிரிப்பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனாமாக அனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி.பி.யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமேனும் முன்பணம் அனுப்பிவிடுவதே உத்தமம், எனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரைமீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒருமாசத்திற்கு ... | ரூபா | 7—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 4—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 2—8—0 |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ நூ வீதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும். நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

## விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றைவெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு. பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனாமாக அனுப்புவதுடன் அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.

கருணையானந்த ஞானபூபதி,
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத் துணை.

ஸம்ஷால் மஹறிபா என்னும்

# ஞானசூரியன்.

இது ஒரு இனிய நிகரில்லாத மாதப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

| | | |
|---|---|---|
| மலர் 2.] | ருத்ரோற்காரிஷு கார்த்திகைமீ 1௳<br>1923ஷு நவம்பர்மீ 16௳ | [இதழ் 8. |

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

இல்லையில்லை யென்னினெனன்று மில்லா தல்ல
வியல்பாகி யென்றுமுள்ள வியற்கை யாகிச்
சொல்லரிய தன்மையதா யான்ற னென்னத்
தோன்றுதெல் லாம்விழுங்குஞ் சொரூப மாகி
யல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லா
மடையவுண்டு தடையறவுன் னறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னாகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்குந் தானே.

(தாயுமான வள்ளல்.)

ஞான சூரியன்

இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

## அடியார் நிந்தை.

(105-ம் பக்கத் தொடர்ச்சி.)

என்ன சாத்துவீகம்! என்ன அன்பு! என்ன பொறுமை! இப்புண்ணிய புருடரன்றோ? இல்லற தருமத்திற் சிறந்த பரிபாக பக்குவமுடையவர். இத்தகைய தருமசீலர்கள் நமது நாட்டின் கண் மலிந்திருப்பின் அடியார் குழாத்திற்கு என்னகுறை! அவர்கள் பாக்கியமே பெரும்பாக்கியம்! இவ்வாறிருக்க,

சிலர் மேலவீட்டில் கேள்; கீழவீட்டில் கேள்; அடுத்த வீட்டைப்பார்; பெண்பிள்ளை வெளியில் போயிருக்கிறாள்; கைவேலையாயிருக்கிறாள்; சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் முந்திப் போய்விட்டதென்று பலவிதமாகச் சொல்வார்கள். சிலர் இவன் உலக்கை தடியன்போலிருக்கிறான்; குத்தினாலும் கலநெல் குத்துவான்; கூலிவேலை செய்தாலும் குறுணி சம்பாதிப்பானே! இவனுக்கு ஏன் சோறுபோடவேண்டும் என்று கடிநாய்போற் சீறி விழுந்து நிந்திப்பார்கள். அப்படிச் சொல்பவர்கள், கோவில், மடம் முதலானவைகளிலிருக்கும் விக்கிரகங்கள் படங்கள் முதலியவைகளுக் கென்றாலோ புளியோதரை, சர்க்கரைப்பொங்கல், தயிரன்னம், சித்திரான்னம், வடை, சுண்டல் முதலிய பற்பல தினுசுகள் தயாரித்து தீபாராதனையிட்டு சுவாமியின்மீது அதிக் பக்தியுள்ளவர்கள்போல் நிவேதனஞ் செய்துவிட்டு, பெண்சாதி

பிள்ளைகள் முதலிய எல்லோரும் வயிறுபுடைக்கத் தின்பார்கள். விக்கிரகங்கள், படங்கள் முதலானவைகள் சாப்பிடுவதாயிருந் தால் அத்தன்மையானவர்கள் ஒருசோற்றுப் பருக்கையையாவது வைத்து நிவேதிப்பார்களா? ஒருபோது மில்லை. கடவுளோ ஒருநாம் ஓர்குலமும் ஓர்வடிவும் இல்லாதவராயிருக்கிறார் என்பது பின்வருஞ் சரித்திரத்தால் நன்கு விளங்குகின்றது.

இச்சென்னை இராஜதானியை அரசாண்டுவந்த முகம்மதிய அரசராகிய நவாபு காலத்தில் காஞ்சீபுரத்து கோயிலைச் சைவர் களும் வைஷ்ணவர்களும் தம் தம்முடையதென நவாபிடம் பிரி யாது கொடுத்தனர். அப்போது நவாபு இருவகுப்பினரையும் நோக்கி உங்கள் சாமியின் சொரூபத்தை வரைந்துகொண்டு வாருங்கள். அதன்பிறகு தீர்ப்புச் சொல்கிறேன் என்றனர்.

வைஷ்ணவர்கள் உடனே வந்து கைதேர்ந்த சிற்பசாஸ்திரி களைக்கொண்டு அதிக பொருட்செலவு செய்து கிருட்டினன் சொரூபத்தையெழுதி நவாபிடம் கொண்டுபோய்க் கொடுத்தார் கள். அதை நவாபுகண்டு ஒருவிதமாக மனத்துள் தீர்ப்புச்செய்து வைத்தனர்.

சைவர்கள் அதையுணர்ந்து நமது சாமியின் உருவத்தை எவ்விதமாக எழுதுவதென்று ஆலோசித்து ஒன்றுந் தோன்றா மல் திகைத்து, அதன்பின் தேவாரப்பதிகங்கள் எழுதிய ஏட்டுச் சுவடியில் ஒரு நூலைப்போட்டு திருவுளச் சம்மதம் எப்படியிருக் கிறதென்பதைப் பார்த்தார்கள். அவ்வேட்டில்,

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
 மயானத்தான் வார்சடையா னென்னி னல்லான்
ஒப்புடைய னல்லனொ ருவ னல்லன்
 ஓரூரன் அல்லனோ ருருவ மில்லி
யப்படியு மந்நிறமு மவ்வண் ணமும்
 அவனருளே கண்ணாகக் காணி னல்லா
லிப்படிய னிந்நிறத் தனிவ்வண் ணத்தன்
 இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே.

என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்து ஒன்றுந் தோன்ருதவர்களாய் இனி என்செய்வது? என்று மலேத்து ஆலோசனைக்கடலுள் அமிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது, உங்கள் சாமிபடம் எழுதி யாகிவிட்டதா? என்று நவாபிடத்திலிருந்து சைவர்களுக்கு உத்தரவு வந்தது. சைவர்கள் மேற்கண்ட பாடலைக் குறிப்பிட்டுக் கொண்டுபோய் நவாபிடத்தில் கொடுத்தார்கள். அச்செய்யுளின் கருத்தை நவாபு உணர்ந்து, இந்தச் சைவர்கள் சாமியானது ஓர் வடிவமும் ஓர் நிறமும் ஓர் ஊரும் ஒருகுலமும் இல்லாதது என்பதால் பெரும்பாலும் நமது அல்லாகுத்தாலாவைப் போலவே ஒத்திருக்கிறது. இந்த வைணவர்களோ ஒருபடத்தை அழகாய் எழுதி நம்மை ஏமாற்றப் பார்த்திருக்கிருர்கள். ஆகையால் கோவில் சைவர்களுக்கே சொந்தம் என்று தீர்ப்பளித்தனராம்.

இந்த விவகாரத்தின் மூலமாய்க் கடவுளுக்கு ஓர் வடிவமும் ஓர் நிறமும் ஒரூரும் இல்லையென்று நன்கு புலப்படுகிறது. இத்தகைய கடவுளுக்கு ஓர் வடிவமும் நிறமும் ஊரும் ஏற்படுத்தி, நிவேதனம் என்று தாம்புக் கயிற்றையும் அங்கவஸ்திரத்தையும் சுருட்டிவைத்து நிவேதித்து, ஏமாற்றி பொய்ப்பூசை பண்ணுகிருர்களென்ருல் இவர்கள் கதி என்ன கதியாகும்? அதோகதி! தான் ஆகும். இதனைக் குறித்து ஒரு கதையுண்டு.

முன்னெரு காலத்தில் அந்தகரு முடவருமாகிய இரண்டு வித்துவான்கள் இரட்டையர் என்றிருந்தனர். அவர்கள் ஒருவர்க்கொருவர் சகோதரர். ஆசுகவி பாடுவதில் சதுரர்கள். அவர்கள் ஒருநாள் திருவனந்த புரத்துக்குப் போயிருந்தபோது அவ்வூர்க் கருகாண்மையிலுள்ள ஆங்கூர்ச் சிவன் கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்துவிட்டு அமுதுவாங்கிப் புசிப்பதற்காகக் காத்திருந்தனர். குருக்கள் வழக்கம்போல் வெறுந் துணிமூட்டையைக் காட்டிவிட்டு சத்தமிடாமல் வீட்டுக்குப் போயினர். இரட்டையர்கள் பசியோடு வெகுநேரம் வரையிற் காத்திருந்தும் பிரயோசனப்படாமல்,

தேங்குபுக ழாங்கூர்ச் சிவனே! சில் லாளியப்பா!
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ? என்று

அரைவெண்பாவைப் பாடினர். அதற்குள் அந்தக் கோவிலி லுள்ள சில்லாளியப்பர் இரட்டையர்களை நோக்கி,

—போங்காணும்
கூறுசங்கு டோல்முரசு கொட்டோசை யல்லாமல்
சோறுகண்ட மூளியார்? சொல்.

என்று கூறினராம். கடவுள் அரூபியாக அன்னுகாரத்தை விரும்பாது இருக்கும்போது, அவருக்கோர் சொரூபம் வகுத்து அன்னம் படைப்பதாகத் தாம்புக்கயிற்றை வைத்துப் பரிகாசம் பண்ணி வருந்துவதைப் பார்க்கிலும் பஞ்சபாண்டவர்களில் ஒருவனுகிய வீமன் தான் செல்லுமிடங்களிற் காணும் நந்த வனங்களிலுள்ள மலர்களையெல்லாம் சிவார்ப்பணம்! சிவார்ப்ப ணம்! என்று மானதமாகப் பாவிக்க, அப்புட்பங்கள் கைலையங் கிரியில் மலைமலையாகக் குவிய அதைத் தினந்தோறும் வெளியில் அகற்றுவதற்குத் தேவர்கள் எல்லாம் சலிப்படையச் செய்தது போல் இவர்களும் மானதமாகப் பூசைசெய்து முடிப்பதானது மிகச் சிறந்ததல்லவா?

தொண்டை மண்டலத்தில் திருநின்றவூர் என்னுங் கிராமத் தில் பிராமண குலத்தில் பூசலார் நாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கடவுள் அடியார்களுக்கு வேண்டுவனவற் றையெவ்விதத்திலும் தேடிக்கொடுத்துப், பரமசிவனுக்கு ஓரால யங்கட்டுதற்கு விரும்பி யெங்கும் வருந்திப் பொருள் தேட, அற்பமுங் கிடையாமையால் மனம் நைந்து, ‘இதற்கு யாதுசெய் வேன்’ என்ருலோசித்து மனேபாவனையினலே (மானதமாக) ஆலயங்கட்டத் துணிந்து மனதினலேயே அதற்கு வேண்டுந் திரவியங்கள், உபகரணங்கள், சிற்பர்கள் முதலானவைகளைத் தயாரித்துக் கொடுத்து சுபதினமும் பார்த்து நிலைமுதலியவை கள் நிறுத்திக் கோவில்கட்டி முடித்து பிரதிட்டை (கும்பாபி ஷேகம்) செய்தற்குரிய சுபதினத்தை யெதிர்பார்த்திருந்தார்.

பேரிய புராணம்.

அடிமுத லுபானமாதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கண் முற்ற மனத்தினல் வகுத்துமான
முடிவுறு சிகரந்தானு முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக்கோயி னிரம்பிட நினைவாற் செய்தார்.

காடவர்கோன் என்னும் அரசன், தமது இராசதானி யாகிய காஞ்சிபுரத்தில் ஓர் சிவாலயங் கட்டுவித்து பிரதிட்டை செய்ய, ஓர் சுபதினத்தை எதிர்பார்த்திருந்தான். பூசலார் குறித்த சுபதினமும் அரசன் குறித்த சுபதினமும் ஒரே நாள் நட்சத்திரமாக இருந்தபடியால், பூசலார் நாயனர் அன்பை விளக்குவான் கருதி கடவுள், முதல்தினத்தில் அவ்வரசன் கனவில் தோன்றி, 'நின்றவூரில் பூசல் என்பவன் நமக்கோர் ஆலயம் கட்டியிருக்கிறுன். அதில் நாளைக்கு நாம் பிரவேசிப்போம் ஆகலின், உன் பிரதிட்டைக்கு மற்றொரு சுபதினத்தைக் குறித்துக்கொள்க' என்றுகூறி மறைந்தனர்.

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

---

## அடியாரிலக்கணம்.

(101-ம் பக்கத் தொடர்ச்சி.)

என்று கேட்டான். அதற்கு வேதியர்கள் கோடி பிராமணர்களுக்கு அன்னதானமும், கோதானம், பூதானம், சொர்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம் முதலியவைகளையும் செய்தால் புத்திரப்பேறு உண்டாகும் என்றனர். அதைக்கேட்ட அரசன் பிராமணர்களுக்கு மாத்திரமே தானம் செய்யவேண்டுமா? மற்ற வருணத்தார்களுக்கும் தானம் செய்யலாமா? என்றனன். அதற்கு சுயநலப் புலிகளாகிய பார்ப்பனர்கள், 'பிராமணர்களுக்கு மாத்திரந்தான் செய்யவேண்டும். மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய அவசியமேயில்லை, ஆனாலும் மறையவர்களுக்குத் திருப்திவரச் செய்தபின் செய்தாலுஞ் செய்யலாம்' என்றனர். அதுகேட்டு அரசன், சத்திரத்தில் வருகிற பார்ப்பனர்

களுக்கு (*) 'பிராமணம் போஜனப்பிரியம்' என்பதற் கிணங்க வடை பாயசத்துடன் திருப்திகரமான பூரண போசனமும் ஆதுலர்களுக்கு ஆடையாபரணம் முதலியவைகளும் கொடுக்கும்படி கட்டளையிட்டனர்.

இப்பழமொழிக் கிணங்க சில பார்ப்பனர்கள் அடிவயிற்றில் வாழைநாரைக் கட்டிக்கொண்டு, அது தெறிக்கும்படி பந்தி போசனஞ் செய்பவர்கள் என்று சொல்லுவது கர்ணபரம்பரை. இதைப்பற்றி ஒரு சிறிய கதையுண்டு.

சில வருடங்களுக்கு முன் ஸ்ரீரங்கத்தில் ஐயங்கார்ப் பிராமணர்களுக்கெல்லாம் சமாராதனை நடந்தது. அப்போது கறி வகைகளெல்லாம் நளபாகமாக இருந்தபடியால், ஒவ்வொருவரும் அளவுகடந்து புசிக்க நேரிட்டது. அவ்வாராதனைக்கு ஓர் வைஷ்ணவப் பிரபல ஆச்சாரியார் தமது சிஷ்ய குழாத்துடன் வந்து நிரம்பப் புசித்து வெளியேறித் தமது வீட்டுக்குப் புறப்படும்போது தமது பாதரட்சையைக் குனியமாட்டாமல் கால் நிதானமாகத்தேடிப்பார்த்தார். அவ்விடத்தில் பலபேர்களுடைய பாதரட்சைகளும் இருந்தபடியால் தன்னுடைய பாதரட்சை இன்னதென்று கண்டுபிடிக்க முடியாமல் சீடர்களை நோக்கி, 'என்னுடையபாதுகைகளை யெடுத்துவையுங்கள்' என்றார். அதற்குச் சீடர்களும் குனியமுடியாமல், 'சூரியமண்டலம், சந்திர மண்டலம், நட்சத்திரமண்டலம் முழுவதும் தேடிப்பார்த்தோம். ஒருவிடத்திலும் காண்கிலேம்' என்றனர். அப்போது ஆச்சாரியர் கால் நிதானமாகவே தன்னுடைய பாதுகையென்று மற்றொருவருடைய பாதுகையை மாட்டிக்கொண்டு அகத்துக்குத் தெய்வப் பிரயத்தனமாய் வந்து சேர்ந்தும் மூச்சுப்போய் வர வழியில்லாமல் முட்டுவதால் ஓரிடத்திலும் இருக்கமுடியாமல் உலாவிக்கொண்டே யிருந்தார். அப்படி உலாவிக் கொண்டிருந்தும் சகிக்கமுடியாமல் மனைவியை விளித்து, 'அடியே! இந்தச் சங்கடத்துக்கு என்னடி செய்கிறது? நீயாவது ஒருமார்க்கம்

* பிராமணம் போஜனப் பிரியம்.

சொல்லப்படாதா? சும்பத்தேவடியாள் கொஞ்சமேனும் மனமிரங்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாளே' என்றனர். அதற்கவள் 'ஒரு விரலைவிட்டு வாந்தி பண்ணி விடுங்களேன்' என்றாள். 'ஒருவிரல் போவதற்கு இடமிருந்தால் ஒருவடையும் கொஞ்சம் பாயசமும் விட்டு நிரப்பி யிருக்கமாட்டேனா? விரல் போகத்தானே வழியில்லை' யென்று சொல்லி அழுதார். அவ்வழுகுரலைக் கேட்டு ஜனங்கள் கும்பல் கூடினர் என்பதுங் கர்ண பரம்பரை. பிராமணர்கள் வடை பாயசத்துடன் சாப்பிடும் போசனத்தைப் பசிக்குணவெனக் கருதாது, அதையே தெய்வமாக வெண்ணி,

"அற்றால் அளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு."

என்னும் திருவள்ளுவரின் கருத்தையும்,

"நீபெருக்கத் தின்றக்கால் நித்திரையுங் கோபமதாம்
நீசுவர்க்கத் தேகாம லேநிறுத்தும்."

என்னும் ஞானமணி மாலையின் கருத்தையும் உணர்ந்து அரை வயிறு போசனமும் கால்வயிறு உதகமும் கொள்ளவேண்டியதிருக்க, அது சோறு கிடைக்காதவனுக்குச் சொன்ன சாஸ்திரமென்று தூஷித்துவிட்டு அளவுக்குமேல் சாப்பிடுகிறவர்கள். ஆதலாலேயே இக்காலத்தில் பார்ப்பனர்களில் அதிக மகான்கள் இல்லை. ஆனால் இக்காலத்தில் மிதபோசனமும் சமரசப்பொது நோக்கமும் பொருந்திய பிராமணர்கள் சிறு பான்மையோர் இருக்கின்றனர். இத்தகையோர் பெரும்பாலும் உத்தியோகஸ்தர்களாகவே காணப்படுகின்றனர்.

திருவருட்பா.

சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடி லொருவன்
றன்னுநற் றவமெலாஞ் சுருங்கி
யாற்றிலே கரைத்த புளியெனப் போமென்
றறிஞர்க ளுரைத்திடல் சிறிதும்
போற்றிலே னின்னைப் போற்றிலேன் சுவையிற்
பொருந்திய காரசா ரஞ்சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே யாசை
தங்கினே னென்செய்வே னெந்தாய்.

பதஞ்சலியார்.

அரைவயி றொருபொழு துணுமவர் மவுனமும்
அவர்களும் அறிவாரே.

அரசன் தானதருமஞ் செய்வதைக் கேள்வியுற்ற கூத்தாடிப் பெண், தன் வித்தையைக் காட்டி அதிக பரிசுபெற எண்ணி திரியம்பகருடன் போய் ஒருதோப்பில் தங்கியிருந்தாள். அவர்களுக்குப் பசியாக இருந்தபடியால் அவள் திரியம்பகரைப் போய்ச் சோறு வாங்கிவரும்படி அனுப்பினாள். அவர் மேற்படி சத்திரத்தை யடைந்து, சுவாமிகளே! அதிக பசியாயிருக்கிறது ? கொஞ்சம் அமுதுபடையுங்கள் எனக்கேட்க, அங்கிருந்த பார்ப்பனர்கள், 'ஆரடா! இந்த அகாலத்திற் சோறு கேட்கின்றவன், சோறுமில்லை, கறியுமில்லை, அதிலும் பிராமணர்களைத் தவிர மற்றவர்களுக்குப் போடுகிற வழக்கமுமில்லை. இங்கு நில்லாதே ஓடிப்போ' என்று, "கன்மனப் பார்ப்பார் தங்களைப் படைத்துக் காகத்தை என்செயப் படைத்தாய்" என்னும் பழமொழியும் "முட்டிபுகும் பார்ப்பார் அகத்தையெட்டிப் பாரோமே" என்னும் கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் வாக்கியமும் நிச்சயமாகும் வண்ணம் கர்ண கடூரமாகச் சொன்னார்கள்.

தருமத்திற்காக சத்திரங்கட்டி அன்னதானஞ் செய்வதில் பிராமணர்களுக்கு மாத்திரம் அன்னம் போட்டால்தான் புண்ணியம் மற்றவர்களுக்குப் போடுவது பாவம் என்று எண்ணினால் குளிக்கப்போய்ச் சேறுபூசிக் கொண்டுவந்ததுபோலாகும். பசியுடையவர்கள் கொலைபுலைபுரியும் பாதகர்களாயிருப்பினும் அவர்களுக்கு அன்னமிடுதல் அவசியம் என்று வடலூர் இராமலிங்க வள்ளல்,

"உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பு முடையவர்க ளெல்லா
முறவினத்தா ரல்லரவர் புறவினத்தா ரவர்க்குப்
பயிர்ப்புறுமோர் பசிதவிர்த்தன் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேலிங்கே."

எனவும் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். பசித்தவன் நொந்தால் எல்லாப் புண்ணியங்களும் நாசமாய்விடும். பசித்த

வர்க்கிடும் அன்னமே தருமமாகும். உயர்ந்தோர், தாழ்ந்தோர், பெரியோர், சிறியோர் என்கிற பாகுபாடுகளை நீக்கி, எவராயிருப்பினும் பசித்தவர்க்கே முதலில் அன்னமிடவேண்டும்.

திருமந்திரம்.

"ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே.

தன்னை யறியாது தானல்லா ரென்னுதிங்
கின்மை யறியாது இளைஞரென் றோராது
வன்மை யில்வந் திடுங்கூற்று வருமுன்னம்
தன்மையு நல்ல தவஞ்செய்யும் நீரே

அற்றுநின் றாருண்ணு மூணே யறனென்னும்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்—"

என்னும் இச்செய்யுட்களின் கருத்தைச் சற்றும் உணராது, அப்பார்ப்பனர்கள் கர்னகடூரமாகச்சொன்னதைக்கேட்டு அருகிலிருந்த காராளகுல திலகர் ஒருவர் மனமிரங்கி, ஐயோ! பாவம்! இவன் எப்போது சாப்பிட்டானோ தெரியவில்லை. ஏதாவது கரிப்பற்றிருந்தாலும் பார்த்துப் போடுங்கள் என்றனர். அதன்பின் சுயநலப்புலிகள் தங்களுக்குதவாத அடிப்பற்றுக் கரிச்சோற்றையும் ஊசிப்போன பழைய கறிகளையும் இட்டனர். அதை வாங்கிப்போய் கூத்தாடிப் பெண்ணுக்கிட்டு எஞ்சியதைத் தானும் புசித்தார். அப்போது இலட்சம் பிராமணர்கள் சாப்பிட்டானபின் தெய்வீகமாய் ஓர் அடி அடிக்கிற மணியானது, நடை, உடை முதலிய பாவனைகளில் பிச்சைக்காரனைப் போன்றிருந்த மகானாகிய திரியம்பகர் சாப்பிட்டவுடனே மூன்றே முக்கால் நாழிகை அதாவது ஒன்றரை மணிநேரம் வரையில் விடாமல் கணீல்! கணீல்! என்று முழங்கிக்கொண்டிருந்தது. அவ்வோசையைக் கேட்ட அரசன், மந்திரி, பிரதானி முதலிய சகலரும் போசனம் பரிமாறப்படாத இந்த அகாலத்தில் என்ன காரணத்தினால் இப்படி ஓயாமல் மணி அடித்தது? என்று போச்

சரியமடைந்து, இப்போது இவ்வளவு மணி அடிக்கக் காரணம் என்ன? இந்த அகாலத்தில் யாராவது சாப்பிட்டார்களா? என்று சத்திரத்தில் கேட்டு வரும்படி ஒரு சேவகனை அனுப்பினர். அவன் அங்ஙனமே போய் சத்திரத்தில் விசாரித்தான்.

அதற்கு அங்கிருந்த பிராமணர்கள், 'ஒருவருமே சாப்பிடவில்லை. ஆனால் ஒரு பிச்சைக்காரனுக்கு அடிப்பற்றிய கரிச் சோற்றையும் ஊசிப்போன பழங்குழம்பையும் போட்டோம் (அதைச் சொல்லவேண்டிய நிமித்தமேயில்லை) அதற்காகவா? மணி அடித்திருக்கப் போகிறதென்று இழுத்தாப்போல் தாழ்ந்த குரலுடன் கேவலமாகச் சொன்னார்கள். அதைக்கேட்ட சேவகனும், மணி அடித்ததற்குக் காரணம் அவனாக இராதென்று சொல்லிவிட்டு அரசன் சமுகத்தில் வந்து, தான் கேட்டவைகளை ஆதியோடந்தமாகச் சொன்னான்.

ஞானக்களஞ்சியம்,

---

## சங்கீதம்.

(93-ம் பக்கத் தொடர்ச்சி.)

### திருவிளையாடற் புராணம்.

ஆய மாதர்பேர் பொன்னனை யாளென்ப அவள்தன்
நேய ஆயமோ டிரவிருள் நீங்குமுன் னெழுந்து
தூய நீர்குடைந் துயிர்புரை சுடர்மதிக் கண்ணி
நாய னாடி அருச்சனை நியமமு நடத்தி.

திருத்த பூவண வாணரைச் சேவித்துச் சுத்த
நிருத்த மாடிவந் தடியரைப் பொருளென நினையுங்
கருத்த ளாயருச் சித்தவர் களிப்புஇன் சுவையூண்
அருத்தி யெஞ்சிய தருந்துவாள் அஃதவள் நியமம்.

இத்தகைய மேன்மைவாய்ந்த அந்தத் தாசிவீட்டிற்கு அக் கள்வர்கள் போய்ச் சேர்ந்து நள்ளிருளிற் கன்னம் வைத்தார்கள். திருட்டுத் தொழிலில் நன்கு பழகாதவர்களையே முதன் முதல் கன்னவாயலுக்குள் நுழையச்செய்வது கள்வர்கள் வழக்கமாதலால், வித்துவானைக் கன்னவாசலுக்குள் நுழையச் செய்தார்கள். அவரும் அங்ஙனமே சென்று இன்னதுசெய்வது என்று ஒன்

றுந் தோன்ருமல் மலேத்து நின்றுகொண்டிருந்தார். அந்த வேளேயில் பொன்னனேயாள் என்னும் தாசி, சிவன் கோவிலுக்குச் சென்று சுவாமிக்கு ஆடல்பாடல் முதலிய தொண்டுகள் செய்துவிட்டு, அர்த்தசாமத்திற்குப் பின் தனது வீட்டுக்கு வந்து சயனிக்கப் போகும்போது, திருப்பூவண நாதர்மீது தோத்திரமாகச் சுயம்பாடித் தியானித்துக்கொண்டு சயனிப்பது வழக்கம். அந்த வழக்கம்போல் அன்றிரவும்,

தலேயி லிரந்துண்பார் தன்னுடலிற் பாதி
மலேயின் மலேமகளுக் கீவர்—

மலேயின் மலேமகளுக்கீவர் என்று பாடிக்கொண்டே, தனிச்சீரும் பின் இரண்டடியும் வராமல் முன் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி ஆலோசித்து வருந்திக் கொண்டிருக்கும் போது, திருடரோடு வந்த தலேமலேகண்ட தேவர் அதைக் கேட்டு மனம் சகிக்க முடியாதவராய்,

—உலேயின்
இருப்புவன மேனியரு ரென்ருலோ

என்று அடியெடுத்து முடிப்பதற்குள், அந்தத் தாசியானவள்,

... ... ... ஆமாம்
திருப்பு வனத் தீசர் திறம்.

என்று பாடி முடித்தாள். அவ்வாறு இருவரும் பாடிக்கொண்டதையறிந்த கள்வர்களெல்லாம், நூற்றைக் கெடுக்கும் குறுணி' என்ற பழமொழிபோல், வெள்ளோலே கிறுக்குகிற வீண்பயலே நாம் கூட்டிக்கொண்டு வந்ததனுலல்லவா? அவன் புத்தியைக் காட்டிவிட்டான். ஆதலால் குற்றம் நம்மிடத்திலேயே யல்லாமல் அவனிடத்தில் கிஞ்சிற்றுமில்லே. இனி நமது உயிர் தப்பிப் போவதே தகுதியென்று ஓட்டம்பிடித்தார்கள். இஃதிவ்வாறிருக்க,

தாசியானவள், இந்த அர்த்தசாமத்தில் நமது பாடலுக்குத் தகுதியான பொருள் அமைத்துப் பாடலேப் பூர்த்திபண்ணியவர், நமது திருப்பூவண நாதரேயன்றி சாமானிய மனிதரல்லவென்று அடங்காமகிழ்ச்சிகொண்டு சத்தம் பிறந்த திசையை நோக்கி

யெழுந்துபோய்க் கட்டிப்பிடித்து விளக்கேற்றிப் பார்த்து நமஸ்கரித்து ஐயா! நீர் யார்? எந்த ஊர்? எங்கே வந்தீர்? என்று அன்பாவலோடு கேட்டாள், அதற்கு வித்துவான், அம்மணி! நான் உன்னுடைய வீட்டில் கன்னமிடவந்த திருடன் என்றனர். அதையுணர்ந்த தாசி, ஐயா! தாங்கள் கள்வருமல்ல, சாதாரண மனிதருமல்ல, ஸ்ரீ திருப்பூவண நாதரே என்மீது கிருபைகூர்ந்து மனித வடிவாகவந்த தெய்வப்புலவர். ஆதலால் அடியாளுடைய திரவியங்களில் எவ்வளவு வேண்டுமென்றாலும் எடுத்துச் செல்லுங்கள் என்று இன்மொழிகூறி, பத்துநாள் வைத்து உபசரித்துப் பிறகு பொற்பணம் ஆபரண முதலியவைகளை மூட்டையாகக்கட்டி ஒரு ஆள் தலையில் வைத்து அனுப்பினள். அன்றியும், தாங்கள் உள்ளவரையில் தங்கள் குடும்பச் செலவுக்கு வேண்டிய திரவியங்களை வருடாவருடம் அனுப்பி வருகிறேன். அதற்கு பதிலாகத் தாங்கள் வசிக்கும் மருதூர் சுவாமியின்மீது ஒரு அந்தாதி பாடியருளவேண்டும் என்று கேட்டுக்கொண்டனள். வித்துவானும் அங்ஙனமே பாடிக் கொடுப்பதாக வாக்களித்து வந்து, இப்போது வழங்கும் மருதூர் அந்தாதியைப் பாடி யருளினர்.

### கலிவெண்பா.

தலைமலைகண் டானென்றோர் சாதி மறவன்
புலவருக்கு மேலாம் புலவன்—அலைமலைவாய்ப்
பஞ்சகா லங்கள்வந்து பாட்டொருவர் கேட்பரிதாய்
நெஞ்சமெல்லாம் புண்போல் நினைக்கையிலே—வஞ்சியெனும்
தன்மனையா ளுக்குச் சகோதரர் இராக்களவில்
அன்னவர்கள் சீவனம தாகையால்—பன்னுதமிழ்
வாணரே பங்குமக்கு வைத்துத் தருகிறோம்
நாணமின்றி முன்னே நடவுமென்றார்—வேணதவர்
சொல்லியும் விடாமல் துதிசேர் திருப்புவன
வல்லியெனுந் தாசி வளவிலே—கொல்லைதனில்
வந்தே திரண்டுகன்னம் வைத்துட் புகுந்துநிற்கில்
அந்தமனை வேசைசுய மாகவே—முந்தித்
தலையிலிரந் துண்பார் தன்னுடலிற் பாதி

மலையின் மலைமகளுக் கீவர்—மலையின்
மலைமகளுக் கீவரென்றே மாறுமற் சொல்லப்
புலவருமே நிற்கப் பொறுமல்—உலையின்
இருப்புவன மேனிய ரென்றுலோ ஆமாம்
திருப்புவனத் தீசர் திறமென்—றுரைத்திருவர்
சொன்னவுடன் கள்வரெல்லாம் சொற்புலவ ஞல்நமக்கு
வின்னம்வந்த தென்றோடி விட்டார்கள்—அந்நேரம்
சத்தம் பிறந்திடத்தில் தாசியுங்கை கொண்டுகெட்டி
எத்தலம்நீ ரென்றுவிளக் கேற்றிஞள்—முத்தமிழோன்
சன்னமட்டிற் போவதிது தானலவென் றுன்வீட்டிற்
கன்னம்வைத்துள் ளேபுகுந்தேன் கள்ளனென்ருர் — சொன்ன
கள்ளனல்ல நல்ல கவிராஜ ரென்றவள்தான் [வுடன்
உள்ளம்வைத்து வீட்டி னுடமையெல்லாம்—மெள்ளப்
பதரு தெடுத்துப் பணச்சுமையுங் கட்டிச்
சிதருது போமெனவே செப்பிக்—குதரு
மருதூரந் தாதி வழுத்தும்வகை செய்தாள்
திருமா தவளெனுமே தேசம்.

இவ்வளவு கல்வி அபிமானமுள்ள பொன்னனையாள், அடியார்களுக்கு அமுதளித்து அவர்கள் புசித்த மீதஆகாரத்தையே தினமும் புசிப்பதாக விரதம் ஏற்படுத்தி நடந்துவரும் நாட்களில் ஒருநாள், திருப்பூவணத்துச் சுவாமியின் ஞாபகார்த்தமாக ஒரு விக்கிரகத்தைப் பொன்னல் நிருமித்து வைக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு, ஆடல்பாடல் முதலியவைகளில் சம்பாதிக்கப்படும் திரவியங்களை அடியார்களுக்குச் செலவழித்தது போக மீந்ததைக்கொண்டு விக்கிரகம் வார்த்துவிடலாமென்று நினைந்து தபதிகளிடத்தில் அதற்குக் கரு (குகை) வார்க்கும்படி செய்தாள். அதுமுதல் கடவுள் சோதனையினல் சம்பாதிப்பதெல்லாம் அடியார்கள் பூசைக்குச் சரியாயிருப்பதேயன்றி, ஒரு காசாவது மிஞ்சுவதில்லை. ஆதலால் நாம் எப்படி விக்கிரகம் வார்க்கமுடியும் என்ற எண்ணமே ஓயா விசாரமாகிக் கடவுளைச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் கடவுளானவர், ஒரு சித்தர் வடிவங்கொண்டு பொன்னனையாள் வீட்டில் அமுதுபுசிக்க வரும் அடியார்க

ருடன் வந்து, இதர அடியார்களைப்போல் அமுது புசிக்காமல் அவள் மாளிகையின் கடைவாயிலின் ஒருபுறத்தில் தங்கியிருந்தார். குற்றேவல் செய்யும் பணிப்பெண்கள் அவரைக் கண்டு வணங்கி, சுவாமி! அமுதுசெய்வதற்கு எழுந்தருளுங்கள் என்று பிரார்த்தித்தனர். அதற்குச் சித்தர், அவர்களை நோக்கி நீங்கள் சென்று உங்கள் தலைவியை இவ்விடத்திற்கு வரச்சொல்லுங்கள் என்றனர். பணிவிடை மாதர்கள் அவ்வாறே சென்று தமது தலைவியைக் கண்டு, எமது பெருமாட்டியே! அடியார்கள் எல்லாம் திருவமுது செய்தகன்றார்கள். ஒரு சித்தமூர்த்திகள் மட்டும் அமுது புசியாதிருக்கின்றனர் என்றனர். பொன்னனையாள், தாயைத் தேடிச் செல்லும் பசுங்கன்றைப்போல் விரைந்து சென்று நவபுண்ணியத்துடன் வழிபட்டு, சுவாமி! தேவரீர் அடியாள் மனைக்கு எழுந்தருளப் பெற்றதற்கு நானும் எனது முன்னோர்களும் இந்தக் குடிசையும் எவ்வளவு தவம்பண்ணி யிருக்க வேண்டும் என்று புகழ்ந்து, அடிகளே! மனைக்குள் வந்திருக்கக் கடவீர். அடியாள் செய்பவேண்டிய ஊழியங்களைச் செய்கிறேன் என்றனள்.

சித்தமூர்த்திகள் அவளை நோக்கி, அன்பிற் சிறந்த பெண்ணே! நீ விசாரமுற்றுச் சரீரம் மெலிந்திருப்பதாகப் புலப்படுகிறது. அதன் காரணம் என்ன? வென்று வினவினர். அதற்குக் கணிகை, எமது பெருமானே! வேறே ஒரு மெலிவுமில்லை. எங்களது இறைவராகிய சிவபெருமானது திருவுருச் சமைக்க எனக்கு அதிக விருப்பம் இருப்பதால் கருக்கட்டி முடிக்கக் கருதினேன். இப்போது ஆடல் பாடல்களால் நான் நாள்தோறும் சம்பாதிக்கின்ற திரவியங்கள் எல்லாம், தங்களைப் போன்ற அடியார் பூசைகளுக்குச் சரியாக இருக்கின்றதேயன்றி, ஒரு காசேனும் மிஞ்சவில்லை. இதுதான் மெலிவுக்குக் காரணம் என்று சொல்லி நின்றனள்.

சித்தமூர்த்திகள் அவளை நோக்கி, மயில்போன்ற பெண்ணே! நீ செல்வமும் சரீரமும் இளமையும் நீர்மேற்குமிழி

யென்றறிந்து புண்ணிய காரியம் இன்னது என்று நன்கு உணர்ந்திருக்கிறாய். அறஞ்செய்வதிலும் சிவபுண்ணியம் விசேஷம். சிவபுண்ணியத்திலும் சிவபூசை விசேஷம். சிவபூசையிலும் அடியார் பூசையே விசேஷம் என்றுணர்ந்து அடியார்களைப் பூசித்தும் வருகிறாய். ஆகையால் நீ நினைந்து வருந்தும் காரியத்தை நாமே முடித்துக் கொடுக்கிறோம் எனத் திருவாய்மலர்ந்தருளி, அவள் வீட்டிலுள்ள பழமையான பித்தளை, வெண்கலம், ஈயம் முதலான பாத்திரங்களைக் கொண்டுவரும்படிச் செய்து, அவற்றின்மீது திருநீற்றைத் தெறித்து இவைகளை நீ இன்றிரவு நெருப்பில் புடம்போட்டெடுத்தால் மாற்றுயர்ந்த பொன்னாகும். அதனால் சிவபெருமானது திருவுருச் செய்துகொள் என்று சொல்லி மறைந்துபோயினர். அப்படியே அவைகளைப் புடமிட்டுத் திருவுருச் சமைத்தனள் என்பதை விரிவாய்த் திருவிளையாடற் புராணத்திலுங் காணலாம்.

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

---

## சீடரிலக்கணம்.

### (109-ம் பக்கத் தொடர்ச்சி.)

### சிவஞான வள்ளல்.

கடப்பருங் கடல்கடத்துங் கருணையா ரியன் முனிந்தே
அடித்துதைத் தருவருத்திட் டக்கிர மஞ்செய் தாலும்
உடற்பிணி யகற்றவல்ல வுத்தமன் இவனே யென்று
திடப்படு சிரத்தை யுள்ளோன் சீடனென் றுரைக்கும் வேதம்.

பாசமுத லைவகையு நீக்கிப் பதியாக்கிப்
பூசை தவம்விரதம் பொய்யென்ற—ஆசிரியன்
காலா லுதைத்தாலுங் கைதவங்கள் செய்தாலுங்
கோலா லடித்தாலுங் கொள்.

### பிரபுலிங்கலீலை.

இணங்குமிக்க காமிதனக் கின்பமுடல் சரலிங்கம்
பிணங்கல்முத்தி காமிக்குப் பேரின்பென்ப துணர்த்தற்கு
குணங்கள் மிக்காய்! நினைச்சினந்தாங் குறையொன் றுளதோ நினக்கா
பணங்கொள் நிலத்திற் பரமசிவ பத்திக்குவானீ யென் றக்கால். [வின்

துவாபர யுகத்தில், சிகித்துவசன் என்னும் நாமத்தை யுடைய மாளவதேயத்து அரசன் ஒருவனிருந்தான். அவன் சுராட்டிரதேய்த் தரசன்பெற்ற சூடாலை யென்னும் பெண்ணை விவாகஞ் செய்துகொண்டு, இருவரும் உடலும் உயிரும்போல் வாழ்ந்து வந்தனர். சில வருடங்கள் கழிந்தபின்; தமது ஆயுள் கழிந்து போனமையைப்பற்றி விசாரம் ஏற்பட்டுத் தத்துவ விசாரஞ்செய்து, ஆன்ம தத்துவ ஞானம் ஒன்றினாலேயே செனனம் நீங்குமென்று இருவரும் கண்டறிந்தார்கள்.

சூடாலையானவள் தனித்து ஆத்தும விசாரஞ் செய்து, சாதுசங்கத்தை யடைந்து அத்துவிதஞான அப்ரோட்ச, சாட்சாத்கார சொரூபப் பழக்க முதிர்வால் பழைய யௌவனத்தை யடைந்து, அழகாய் விளங்கினாள். அதைச் சிகித்துவசன் கண்டு அதிசயித்து, நீ எவ்வாறு இவ்வரிய வாழ்க்கையை அடைந்தாய்? எனக் கேட்கச் சூடாலை தனது அனுபவத்தை விளக்கமாகச் சொல்லியும், அவைகளைச் கவனித்துக் கேளாமலும், அவளை மதியாமலும் சிரித்துச் சொல்கிறான்,

பெண்ணே! நீ அரசிலக்கணத்தில் இருப்பவள்! ஆத்தும சொரூபத்தில் எவ்வாறு விளங்கினாய்? என எளனஞ்செய்து வெளிப்படையாகச் சிரித்து வேறோரிடத்திற்குச் சென்றான். சூடாலை, அரசன் அறியாமைக்காக இரங்கிப் பரிபக்குவ மில்லாதவர்களுக்கு ஆத்தும ஞானத்தைப் போதிப்பவர்கள் அறிவில்லாதவர்கள் என்று ஆன்றோர் நூற்கள் ஒலமிடுவது உண்மை தானென் றுணர்ந்து, பின்பு இருவரும் வேற்றுமையில்லாமல் முன்போலவே வெகுகாலம் சுகித்திருந்தார்கள். சூடாலை அணிமாதி அட்டமாசித்திகளில் பிரசித்திபெற்று விளங்கினள்.

சிகித்துவசன் வெகுகாலம் தானதருமங்களை அளவில்லாமற் செய்து பார்த்தும், காசிமுதலான ஸ்தல தீர்த்த யாத்திரை புரிந்தும், அவைகளால் ஆத்தும லாபத்திற்கு ஏதுவில்லையென்றும், இனி வனத்திற் சென்று தவம்புரிவதே தகுதியானது என்றும் ஆராய்ந்துணர்ந்து, தன் கருத்தைச் சூடாலைக்குத் தெரி

வித்தான். அவள் ஏற்கனவே போதித்ததை அரசன் கேட்க வில்லையென்பதை யுத்தேசித்து, அரசே! நீர் மூப்பினால் சரீரம் தளர்ந்தபின் வனத்திற்குப் போகலாம், இந்த எவ்வனத்தில் வனத்திற்குப்போவது முறையா? என்று அரசன்கருத்து முதிரு மாறு நினைந்து கபடமாகத் தடுத்தாள். அதைச் சிகித்துவசன் கேட்டுப் பெண்ணே! நீ தடுக்கவேண்டாம்; நான் இனிமேல் இங்கு தங்கமாட்டேன்; நீ சிறு பெண்; ஆதலால் என்னுடன் வருதல் தகாது; நீ எனக்குப் பதிலாகப் பூபாலனஞ் செய்து கொண்டிரு என்று போதித்துவிட்டு, பகற்காலம் போனபின் புச் சந்தியாவந்தன நியமங்களைப் புரிந்து பஞ்சணை மெத்தை யைப்போலப் பூமியில் நித்திரைசெய்து, நள்ளிரவில் உள்ளே யிருக்கும் சூடாலை யறியாதபடி மிருதுவாக எழுந்து போகும் போது, கூடவந்தவர்கள் அனைவருக்கும் நகர் சோதனைக்குச் செல்வதாகச் சொல்லி அவர்களை நிறுத்திவிட்டுப் பட்டணத்தை நீங்கி மந்தர மலைச்சாரலில் (18) வருடம் தவம்புரிந்து மெலிந் திருந்தான்.

அப்போது, சூடாலை ஆகாயமார்க்கமாகச் சென்று, தனது நாயகன் இருக்கிற நிலையையுணர்ந்து, அவன் அறியாமைக்காகப் பரிதாபமுற்று, இவனுக்கு இப்போது நாம் போய் ஆத்தும ஞானத்தை யுபதேசித்தால் இவள் நமது மனைவிதானே யென்று அலட்சியம் செய்வானென்று கருதி, ஒரு பிராமண குமாரன் வடிவமெடுத்து ஆகாயமார்க்கத்திலிருந்து கணவன்முன் இறங்கி னாள். அதைச் சிகித்துவசன் நோக்கி உடனேயெழுந்து வணங்கி ஆசனங்கொடுத்து அஞ்சலிபந்தனாக நின்று, தேவகுமாரனாகிய தேவரீருடைய தெரிசனத்தால் ஆத்துமப் பிரயோசனம் அடைந் தேன்! என்று துதித்து, நீர் யாருடைய புத்திரர்? உமது பெயர் என்ன? இங்குவந்த காரியமென்ன? என்று கேட்க, சூடாலை யாகிய பிராமண குமாரன் சொல்லுகிறான். நான் நாரதருடைய புதல்வன், என்பெயர் கும்பமுனியென்பது முதலாகத் தன் வர லாறு முழுமையும் ஞானவாசிட்டக் கதையிலுள்ளபடி கூறி,

அரசனது அறியாமையையும், சகலத் தியாகம் இன்னதென்பதையும், சித்தத்தியாகம் இன்னதென்பதையும் விளக்கி ஞானோபதேசஞ்செய்து, அரசனது சமாதியின் திறத்தையும் மாதர்மீதுள்ள இச்சையையும் பரிசோதிக்க நினைந்து, நாயகனைப் பார்த்துக் கும்பமுனியாகிய சூடாலை சொல்லுவாள்.

தேவலோகத்தில் இன்றையதினம் ஒரு திருவிழா நடக்கிறது. அவ்விடத்தில் எனது பிதாவாகிய நாரதருடன் நான் இருந்தே தீரவேண்டும். சூரியாஸ்தமனத்திற்குள் நான் இவ்விடம் வந்து சேர்கிறேன் என்றுகூறி, ஆகாயமார்க்கமாகத் தலைவன் கண்ணுக்குத் தெரியாதவரைக்கும் போய்த் தான் சூடாலை வடிவமெடுத்து, சற்றுநேரங் கழித்துத் திரும்பவும் கும்பமுனி வடிவம் தாங்கிக் கணவனிடம் வந்து, சுருங்கிய முகத்துடன் விசாரமுடையவளைப்போ லிருந்தாள்.

அரசன், சூடாலையாகிய தேவகுமாரனை நோக்கி, எனது பிதாவே! தேவரீர் வதனமானது சுருங்கிப் போயிருக்கவேண்டிய காரணம் யாது? எனப் பலகால் கேட்கச் சொல்லுவாள்.

ஹே! இராசரிஷியே! பிராரத்துவத்தை எவரும் தடுக்க முடியாது, அநுபவித்தே தீரவேண்டும். நான் தேவலோகம் சென்று திரும்பி உன்னை நோக்கி ஆகாயமார்க்கமாகச் சூரிய மண்டலத்திற்குப் பக்கத்தில் வரும்போது, மேகமார்க்கமாகப் போகும் துருவாச ரிஷியை நோக்கி அவரை வணங்கி, நீர் கரிய வஸ்திரத்தைத் தரித்துத் தூர்த்தபுருடனை இச்சிக்கின்ற விபசாரிகளைப்போல் போகத்தொடங்கினீர் என்று சொன்னேன். அவர் கோபித்து, நீ! இரவுகள்தோறும் பெண்ணாகப் போகக்கடவாய்! என்று சபித்தார் என்று சொல்ல, சிகித்துவசன் அவரை நோக்கிப் பயப்படாதிரும்; நியதி வல்லமையினால் வருவது வரட்டும் அதை யாரால் தடுக்கமுடியும் என்று தேற்றிக்கொண்டிருக்க மாலைப்பொழுது வரவும், கும்பமுனி பெண்வடிவமாகமாறி இருவரும் ஓரே சயனத்தில் படுத்துக் கொண்டார்கள், உதயத்தில்

பெண்வடிவம் மாறிப் பழைய கும்பமுனியாகவும், இரவில் பெண் வடிவமாகவும், இருவரும் ஒன்றாகத் தனது கன்னித் தன்மை கெடாமல், சூடாலை சிலகாலம் கூடியிருந்தாள்.

ஒருநாள் மத்தியானம் அரசனை நோக்கி, வேந்தனே! இரவில் பெண்வடிவம் வருவதால், பெண்களின் தன்மையில்லாமல் எத்தனைகாலம் இருப்பது? ஒரு நாயகனை படையவேண்டு மன்றோ? ஆதலால் உன்னையன்றி நான் எவரையும் விரும்பேன்; குருவாக்குக்கு எதிர்வாக்குச் சொல்லாதே யென்று தேற்றி விவாகஞ் செய்துகொண்டு இருவரும் சுகித்திருந்தார்கள்.

இவ்வாறிருக்கின்ற காலத்தில் தலைவனுக்கு ஆத்துமஞான முதிர்ச்சியினால் போக போக்கியங்களில் நிராசை வந்திருக்கிறதா என்பதைத் தேவபோகங்களினால் சோதிக்க நினைந்து, தனது அணிமாதி சித்திகளினால் தேவர்கள் சூழ்ந்துவரத் தேவேந்திரன் அக்கானகத்தில் தோற்றும்படியாக ஒரு மாயை செய்தாள்.

வந்திருக்கும் தேவேந்திரனை அரசன் வணங்கி, நீர் இவ்விடத்திற்குவர என்ன பாக்கியஞ் செய்தேனோ? என்று புகழ்ந்தான். அதற்குத் தேவேந்திரன் சொல்லுவான்.

அரசனே! உமது குணப்பிரதாபங்களைக் கேட்டுத் தேவர்களோடும் யான் வந்தேன். தேவலோக வாழ்க்கையெல்லாம் உமக்கே சொந்தமானது. அங்குற்ற அரம்பா ஸ்திரீகளெல்லாம் உமது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் எழுந்துவருவீர் என்றனன். அதற்கு அரசன் சுவர்க்கத்திலுள்ள சுகங்களை யான் அறிவேன். எனக்கு இவ்விடம் அவ்விடம் என்கின்ற பேதமில்லை. அடியேனுக்கு எவ்விடமும் சுவர்க்கமேயாம். ஆகையால் நீர் வசிக்குமிடம்போமின் என்று அனுப்பிவைத்தான். அதனால் அரசனுக்கு மனம் நசித்திருக்கிறதென்பதைச் சூடாலை யுணர்ந்து, பின்னும் அவனைச் சோதிக்க வெண்ணி ஒரு தூர்த்தபுருடனை யுண்டாக்கிக் கூடினாள். அதை

அரசன் கண்டு, மனோவிகற்பமின்றி நிர்ப்பயமாய்ப் புணருங்கள் என்று சந்தோஷமாகச் சொல்லிப்போனான். அதன்பின் நாயகியாகிய மதனிகை (2) நாழிகை கழித்து அந்த அலங்கோலத்துடன் அரசன்முன் வணக்கமுற்று, செய்த தவறுதலுக்காக விசாரமடைந்தவள்போல் நின்றனள். அதைச் சிகித்துவசன் கண்டு, புணராநின்ற நாயகனை விட்டு ஏன் வந்தாய்? திரும்பிப் போய்ச் சுகத்தைப் பூர்த்தி செய்துவிட்டு வா என்க, மதனிகை சொல்வாள்.

பெண்களுடைய குணம் அனந்தபேதமாக மயங்கும், அதனாலேயே "சித்திர விழியார்நெஞ்சம் தெரிந்தவ ரில்லைத்தானே" என ஆன்றோர் கூறியிருக்கின்றனர். ஆகையால் பொறுத்தற்கரிதான எனது தப்பிதத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று கெஞ்சினாள். அதற்கு அரசன், நான் உன்னை மனைவியாக நினைத்திருக்கவில்லை. ஆனதால் என்னிடம் கோபம் வீராதென்று சமதிருஷ்டியுடன் இருந்தான். அதையுணர்ந்த மதனிகை பழைய சூடாலை வடிவத்துடன் தோன்றிச் சகல விபரங்களையும் ஆதியோடந்தமாகச் சொல்லிக் காட்டினாள். ஆகையால் இந்தச் சூடாலையென்னும் ஞானாசிரியன் தனது தலைவனாகிய சிகித்துவசன் என்னும் சீடனைச் சோதித்ததுபோல், காரணக் குருவானவர் சிலசமயங்களில் அவனவன் மனைவி விஷயமாகவும் சோதிப்பதுண்டு. அதற்கு மயங்காமல், பக்குவர்கள் சமதிருஷ்டியுடனும் பக்தியுடனும் இருக்கவேண்டுவது அத்தியாவசியம்.

இத்திருஷ்டாந்தத்திற்குத் துரியோதனன் மனைவி, கர்ன மகாராசனோடு சதுரங்கமாடும்பொழுது, தனது நாயகன் வரவைக்கண்டு எழுந்துபோகையில் மேகலாபரணத்தைக் கர்னன் பற்றியிழுக்கச் சிந்திப்போன இரத்தினங்களைச் சமதிருஷ்டியுடன் துரியோதனன் பொறுக்கிக் கொடுத்த கதையையும் ஒருவாறு உவமானமாகக் கூறலாம்.

(இன்னும் வரும்) வேதாந்த பாஸ்கரன்.

## நரிக்குக் கொண்டாட்டம்! நண்டுக்குத் திண்டாட்டம்!!

நமக்குக் களியாட்டம்! ஆடுகோழிகளுக்குப் பலியாட்டம்!! ஒருபக்கம் கல்யாணம்; ஒருபக்கம் இழவு. ஒருபக்கம் தொட்டி கட்டுதல்; ஒருபக்கம் குட்டிவெட்டுதல்.

ஒருபக்கம் பொங்கல் மூட்டிக்குக் கல்வைத்தல்; ஒருபக்கம் ஆடு கோழிகளின் தலைக்குக் கல் வைத்தல். ஒருபக்கம் சந்தோஷக்குரல்; ஒருபக்கம் அழுகைக்குரல். ஒருபக்கம் பாற்காவடி; ஒரு பக்கம் உலக்கைக்காவடி.

ஒருபக்கம் சாம்பிராணி வாசம்; ஒருபக்கம் சாம்பிராணியின் இரத்தவெள்ளத்தின் கவிச்சி. ஒருபக்கம் மனுப்பிள்ளை பிறக்கவேண்டும் என்று வெள்ளிப்பிள்ளை தங்கப்பிள்ளை வைத்தல்; ஒருபக்கம் பசலை ஆட்டுக்குட்டியையும், கூவாக் கோழிக் குஞ்சையுங் கொல்லுதல். ஒருபக்கம் இன்பக்கடல்; ஒருபக்கம் துன்பக்கடல். ஒரு கண்ணில் வெண்ணெய்; ஒரு கண்ணில் சுண்ணாம்பு!

ஐயோ! நம்முடைய மாடிவீடு நன்றாக இருக்கவேண்டுமானால், அடுத்த கூரைக்குச் சிலர் நெருப்புவைத்துக் கொளுத்துதல் வேண்டும்? நாம் நன்றாக வாழவேண்டுமானால் வாயில்லாத ஏழைப் பிராணிகளைக் கதறக் கதறக் கழுத்தறுத்தாற்றான வாழ முடியும்?

## இதையுந் தின்னலாமா?

ஐயோ! ஆடுகோழிகளை அலற அலற அறுத்துச் செத்த பிணத்தை அவித்துத் தின்னலாமா? முழு நாற்றமான கருவாட்டைச் சுட்டுப் பொசுக்கித் தின்னலாமா? புழுநெளியும் உப்புக் கண்டங்களைப் பொரித்துத் தின்னலாமா?

ஊன் வடியும் கறியைக்கழுவி எடுத்துக் கயிற்றிற் கோத்து ஆபாசமாக நடுவாசலில் தோரணங் கட்டலாமா? ஐயோ! என்ன துர்நாற்றம்! பிணநாற்றம்! வீடெல்லாம் நாற்றம்! வாசலெல்லாம் நாற்றம்! கையெலாம் நாற்றம்! வாயெலாம் நாற்றம்! இந்தச் சனியனைப் பூத்தொடுக்கவேண்டிய கையினாலே தொடலாமா?

ஆ! கோழி லட்டா தின்கிறது!! அதைச் சூப்பி போட்டுக் குடிக்கலாமா? இருவகை இரத்தங்கலந்த முட்டையைக் கருவை யழித்துத் தின்னலாமா? அதில் தேனு ஊறுகின்றது! கறியி லிருந்து நன்னாரி சரபத்தா வடிகிறது! ஊனன்றோ வடிகின்றது! ஐயோ! அது மருக்கொழுந்தைப் போலவா மணக்கிறது. கற் கண்டைப்போலவா இனிக்கிறது! இந்தக் கழிபட்ட கறியைத் தின்னலாமா? கத்தரிக்காய் வாழைக்காயைத் தின்றாற் பத்தாதா?

---

## பிள்ளைகளுக்கு ஊட்டவேண்டாம்.

தாய்மார்களே !

உங்களுடைய உயிர்க்கு உயிராகிய சிறு பிள்ளைகளுக்கு மாமிச ஆகாரங்களை ஊட்டவேண்டாம்.

உங்களுடைய பிள்ளைகள் சாந்தகுண முடையவர்களாக அன்பு நிறைந்தவர்களாக ஆசாரமுடையவர்களாக இருக்க வேண்டுமானல் சைவ ஆகாரங்களையே ஊட்டுங்கள்.

சிறு பிள்ளைகளே இனி வருங்காலத்து மக்களாவார்கள். அவர்கள் கையிலேயே நாம் நமது நாட்டை ஒப்புவிக்கப் போகின் ரும். அவர்கள் சாந்தகுண சீலர்களாக இருந்தாலல்லது நமது நாட்டை நல்வழியில் நடத்த முடியாது. தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும். ஆதலால் அவர்களை அம்மாமிச ஆகாரங்க ளுக்கு அடிமைகளாக்கி விடாதீர்கள்!

"மாமிச ஆகாரங்களை ஊட்டி வளர்ப்பதனல், அவர்கள் மிகப் பலசாலிகளாக ஆய்விடுவார்கள்" என்று எண்ணவேண் டாம்! மாமிச ஆகாரங்களைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமான சத்து, மரக்கறி ஆகாரங்களிலே இருக்கின்றது.

மக்களுடைய பல் குடல் முதலியவைகள் இயற்கையாகவே, பசு குதிரை முதலிய சாக பக்ஷணிகளுக்கு அமைக்கப் பெற் றிருப்பதுபோல் அமைக்கப் பெற்றிருத்தலால், இயற்கையில் மக்கள் மாமிச பக்ஷணிகளல்லர். சாக பக்ஷணிகளே! நீங்கள் தான் உங்களுடைய மக்களை மாமிச பக்ஷணிகளாக மாற்றி விடு கிறீர்கள். நீங்கள் கெடுவதோடு அவர்களையும் கெடுக்கவேண் டாம்! அவர்களுடைய பிறப்புரிமையாகிய மரக்கறி ஆகாரத் தைத் தடுத்து, மாமிச ஆகாரத்தைக் கொடுக்கவேண்டாம்!!

காரைச் சிவனடியார்.

---

## விசேஷக் குறிப்புகள்.

எஞ்சினுக்கு டிரைவர் இல்லாமல் தானுகவே ஓடும் ரயில் வண்டியொன்று ஜெர்மனியில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வண்டி தானுகவே ஒவ்வொரு ஸ்டேஷனிலும் நின்றுவிட்டுக் குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட்டு விடுகிறதாம். ஸ்டேஷனுக்கு வந்ததும் வண்டியை நிறுத்தத் தண்டவாளத்தில் விசை வைக்கப்பட்டிருக்கிறதாம். குறிப்பிட்ட நேரம் கழிந்ததும் வண்டி தானுகவே நகரத் தொடங்குகிறதாம்.

வடக்கே டோா இஸ்மால்கவுன் என்ற நகரில் இரண்டு கோயில்களில் பூஜைசெய்யும் ஒரு பிராமணர் தன்னுடைய சகோதரியை மணம்புரிந்து கொண்டார். மற்ருெரு பிராமணன் தனது மகளைக் கலியாணம் செய்துகொண்டார்.

ஸ்டென்ரோல்ப என்ற பின்லந்துக்காரன் 60 நிமிஷத்தில் 20 கிலோமேத்தர் (20 மைல்) தூரம் ஓடினும்.

ரேடியோ கிராம் என்ற இயந்திரத்தின் சக்தியால் இந்த நிமிஷத்தில் லண்டனில் கொடுக்கும் சமாசாரம் மறு நிமிஷத்தில் நியூயார்க் நகரத்திற்குப் போய்விடுகிறதாம்.

பர்மா ஒவ்ண்டோம்புவா என்னும் கிராமத்தில் இரண்டு பர்மியர்கள் பரஸ்பரம் தங்கள் மனைவிகளையும் குழந்தைகளையும் மாற்றிக் கொண்டார்களாம்.

திருக்கோவிலூரில் ஒரு ஆடு முயற்குட்டி போட உடனே இறந்துபோய் விட்டதாம்.

கள்ளிக்கோட்டையில் தீயஜாதி பூசாரி ஒருவன் தெய்வம் வந்து ஆடிக்கொண்டிருந்தபோது தன் கழுத்தைத் தானே வெட்டிக்கொண்டானும்.

பாரிஸில் ஒரு பெரிய சாஸ்திரஞர் இருக்கிருர். உலகத்தில் எந்தபாகத்தில் என்னசம்பவம் நேர்ந்தாலும் அது உடனே அவருக்குத் தெரிகிறதாம். உலகத்தில் நடக்கும் சம்பவங்களெல்லாம் அவரது கண்களுக்கு முன் தோன்றுவதாக அவர் கூறுகின்ருர்.

அன்பன்.

விளம்பரம்.

# தாருல் இஸ்லாம்

## இஃதோர் உயர்தர நூதன இஸ்லாமிய
## மூதற்ற்ர மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகாள்! "தாருல் இஸ்லாம்" இன்னதென்பதை இதுவரையில் நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்களா?

இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைகளை யெல்லாம் உள்ளபடியே நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டாமா? குர்ஆன் ஷரீபும் ஹதீதுஷரீபும் கூறப்பட்டிருப்பது இன்னதெனத்தெரிந்து கொள்ளவேண்டாமா? இஸ்லாத்திலுள்ள ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை இன்னதென அறிந்துகொள்ள வேண்டாமா? இஸ்லாத்தின் சமரசக்கொள்கை இன்னதென்பது உங்களுக்குத் தெரியுமா? இஸ்லாத்தின் தேசீய ராஜீய ஞானமும் இன்னதெனத் தெரிந்துகொள்ளவேண்டாமா? முஸ்லீம் உலகமுழுதும் நடைபெறும் முக்கியமான விஷயங்கள் இன்னவையென அறிந்து கொள்ள வேண்டாமா? இஸ்லாத்தில் இதுவரையில் தோன்றியுள்ள பெரியோர்களின் சரித்திரத்தையும் நீங்கள் படித்தறிய வேண்டாமா?

இவைகளெல்லாம் வேண்டுமாயின் எமது "தாருல்இஸ்லா"த்தைப் படியுங்கள். இதன் முதற்பக்கமுதல் இறுதிப்பக்கம் வரையில் அதிரஸமான அபூர்வவிஷயங்களே முழுதும் ததும்பிக் கிடக்கும். இஸ்லாத்தின் பக்தி மார்க்கமும், ஞான மார்க்கமும் இன்ன இன்னவை யென்பதையும் இதன் மூலம் செவ்வனே தெரிந்துகொள்வீர்கள்.

இதில் குர்ஆன்ஷரீபின் மொழிபெயர்ப்பும் இப்பொழுது தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக்கிறது.

இதன் வருஷசந்தா ரூ. 3. வெளிநாட்டுக்கு ரூ. 4.

தனிப்பிரதி விலை அணா 5.

மாதிரி சஞ்சிகை வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர், "தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,
16-17, ஸகின்டு லேன் பீச், மதராஸ்.

# விளம்பரம்.

## கதாரஞ்சனி.

நாவல் நிறைந்த மாத சஞ்சிகை. 1922ஹு ஜனவரிமாத முதல் நடைபெறுகிறது. இதில் இனிய தமிழ் நாவல்களே வெளிவரும். தற்சமயம் அதியற்புதமாயுள்ள நாவல் எழுதப் பட்டு வருகிறது. வருட சந்தா 1—4—0 வெளிநாடு சந்தா 2—0—0. தனி காப்பி 0—2—0.

ஸ்ரீ வாணி விலாச லைபெரரி,
79, சுப்புராயசெட்டி வீதி, திருப்பாதிரிப்புலியூர்.

## கற்பகம்.

ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா ரூ. 1—0—0. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

மானேஜர் கற்பகம் ஆபீஸ், புதுவை.

## ஆத்மசக்தி.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

ருத்திரோற்காரிஹு ஆடிமீ முதல் வெளிவருவது. இலக்கிய இலக்கண ஆராய்ச்சிக்கான வியாசங்கள், வியாபாரம், கைத்தொழில், விவசாயம் இவற்றின் அநுபவங்கள், வேதாந்தம் இதிகாஸ புராணங்களின் நுட்பம், விகடத்திரட்டு, வைத்தியக் குறிப்பு, சிறு கதைகள், அரிய பெரிய நவீனகம் (நாவல்) தேசிய கீதங்கள், மாணவர் சிறுமியர்க்கான இன்ப உரைகள் முதலியவை பல அறிஞர்களால் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு வெளிவரும். விஷயமனைத்தும் ஆடவர் பெண்பாலர் சிறுவர் அனைவருக்கும் பயன் தரக்கூடியன என்போம்.

பாரத புத்திரர்களும் "ஆத்ம சத்திக்குச்" சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தாதரிக்க வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| வருட சந்தா உள்ளூருக்கு (புதுவை) ரூ | 0-12—0 |
| வெளியூர்கட்கு | 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | 1—4—0 |

மாதிரிப் பிரதி இனம்.

'ஆத்ம சக்தி' கார்யாலயம், புதுச்சேரி.

# விளம்பரம்.

## தேசானுகூலன்.

பிணங்கினின்று வாரம் ஒருமுறை வெளிவரும் அரிய தமிழ்ப் பத்திரிகை இப்பத்திரிகையின் அருமை பெருமைகளை வாங்கிப் படித்தாலன்றி எழுதவியலாது. வருடச்சந்தா 5.00 அல்லது ரூபா 8.

**மானேஜர் தேசானுகூலன், பிணங்கு.**

## தேசோபகாரி.

பர்மாவின் தலைநகரான ரங்கூனிலிருந்து ஞாயிறு தோறும் வெளிவரும் ஒரு சிறந்த வாரப்பத்திரிகை. சித்திரப் படங்களுடன் திகழ்வது. அரிய வியாசங்களைக் கொண்டது. தமிழர்களின் பொது நலத்திற்காக உழைப்பது.

வருஷ சந்தா உள்ளூருக்கு ரூ. 5. வெளியூருக்கு ரூ. 6.

**பத்திராதிபர் தேசோபகாரி, இரங்கூன்.**

## இந்துநேசன்.

சனிக்கிழமைதோறும் பிரசுரமாகும் வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை. இனிய வியாசங்களும் அரிய விஷயங்களும் அடங்கியிருக்கும்.

வருஷ சந்தா ரூ. 6—0—0. தனிப்பிரதி 0—2—0.

வேண்டுவோர் இவ்விலாசத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

**மானேஜர் இந்துநேசன் ஆபீஸ்,**
65, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

## அகஸ்தியன்.

12 பத்திரிகைகளும் சேர்ந்த முதல் வால்யம்.

அகஸ்தியன் முதல் வருஷப் பத்திரிகைகள் தனித்தனியே அனுப்பவேண்டுமெனப் பலர் எழுதுகின்றனர். தனிப்பிரதிகள் செலவாகி விட்டமையால், புதிய சந்தா நேயர்களின் சௌகரியத்தைக் கருதி "நமது அகஸ்தியன் பத்திரிகை (முதலாவது வருஷச் சஞ்சிகைகள் 12-ம் ஒருங்கே சேர்த்து) பைண்டுசெய்து வைத்திருக்கிறோம்" சில நூறு புத்தகங்களே கைவசமிருப்பதால் வேண்டுவோர் முந்திக்கொள்ளுமாறு விஞ்ஞாபனஞ்செய்துகொள்ளுகிறோம். 5 பெரிய பிரசங்கங்களும் பல அரிய விஷயங்களும் 304 பக்கங்களுங் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 3—8—0. முன்பணம் அனுப்பவேண்டும்.

இரண்டாவது வருஷத்திற்கு சந்தாதாராகச் சேருங்கள்.

**மானேஜர் அகஸ்தியன் ஆபீஸ்,**
சதானந்தபுரம், கொட்டாரக்கரை. S. I. R.

## விளம்பரம்.

### "நியாயாபிமானி"

பிரதி புதவாரந்தோறும் பிரஞ்சிந்தியாவில் வெளியாகும்
ஓர் தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் வருஷ சந்தா ரூ. 4—0—0
அயல் நாடுகளுக்கு ரூ. 4—8—0

இதை ஒவ்வொரு தமிழரும் வாங்கிப்படித்துப் பயன்பெறுவார்களாக.

மானேஜர் :—நியாயாபிமானி,
காரைக்கால்.

### "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்"

ஒரு ஆங்கில தமிழ் மாதப்பத்திரிகை. மாட்சிமை தங்கிய சென்னை கவர்னரவர்களின் மனைவியார் லேடி வில்லிங்டன் அவர்கள் தந்த உருவப்படத்தோடும், சுய லிகிதத்தோடும் ஒவ்வொரு மாதமும் பதினைந்தாம் தேதி வெளிவரும்.

பத்திராதிபர் டாக்டர் மிஸ்ஸிஸ் அன்னுதாமஸ் அம்மாள்.

வருஷ சந்தா ரூ 3. வெளி நாடுகளுக்கு ரூ. 4.

மானேஜர் :— ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்,
திருநெல்வேலி டவுன்.

### "லக்ஷ்மி"

[என்ற மாதப்பத்திரிகையை எல்லோரும் ஆதரியுங்கள்.]

எங்கள் "லக்ஷ்மி" சித்திரப்படங்களுடன்கூடிய பத்திரிகை. சிறந்த தமிழ் அறிஞர்கள் லக்ஷ்மியில் வியாசங்கள் எழுதுகிறார்கள். எல்லோரும் விரும்பும் பல நல்விஷயங்கள் லக்ஷ்மியில் வெளிவருகின்றன. உங்கள் வீட்டிற்கு நமது லக்ஷ்மியை வரவழையுங்கள். உங்கள் வீட்டில் எல்லோரும் லக்ஷ்மியை விரும்புவார்கள். லக்ஷ்மி உங்களைத் தேடிவருகின்றாள். அவளை அன்புடன் எதிர்கொண் டழையுங்கள். உடனே உங்கள் விலாசத்தைத் தெரிவியுங்கள். மாதிரிப் பிரதி இனமாக அனுப்புகிறோம். மாதிரிப் பிரதியைப் பார்வையிட்டபின் நீங்கள் சந்தாதாராவது நிச்சயம். உங்களுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாவதாக.

வருட சந்தா ரூ. 2—0—0 வெளிநாட்டிற்கு ரூ. 2—8—0

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ்,
தபால் பெட்டி 99, மதராஸ்.

கருணாநிதிக்கடவுள் துணை.

கருணாநிதி கிருபை வேண்டுமானால்

திருவாரூர் ரயில்வேஸ்டேஷன் அருகிலுள்ள

# கருணாநிதி அச்சியந்திரசாலைக்கு

ஆர்டருடன் வந்துசேருங்கள்.

**கல்யாணப்பத்திரிகை, புஸ்தகபாரம் முதலான சகல அச்சுவேலைகளும், சுவர்களில் ஒட்டக்கூடிய (Wall Post) பெரிய விளம்பரங்களும் நமது ஞானபூபதி அவர்களால் திருத்தி, குறித்தகாலத்தில் கூலி சகாயமாக மிக அழகாய்ச் செய்துகொடுப்பார்கள்.**

மானேஜர் :—கருணாநிதி அச்சியந்திரசாலை,
விஜயபுரம்—திருவாரூர், S. I. Ry.

பத்திராதிபர்களுக்கு ஓர் குறிப்பு:—

அடியிற் கண்ட எங்கள் ஞானசூரியன் விளம்பரத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அப்படி பிரசுரித்த பத்திரிகையையும தங்கள் மாற்று விளம்பரத்தையும் எங்களுக்கு அனுப்பிவைத்தால் நாங்களும் எங்கள் ஞானசூரியன் பத்திரிகையில் பிரசுரித்து தங்களுக்கு பத்திரிகை அனுப்பிவைக்கிறோம்.

## "ஞான சூரியன்"

இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

இது இனிய செந்தமிழ் நடையில் அழகாக எழுதப்பெற்ற வியாசங்களைத் தாங்கி, ஆண் பெண் இருபாலருக்கும் படிக்கப் படிக்க நல்லறிவைக் கொடுத்து பரமானந்த மயமாய் ருசிக்கக்கூடியது. ஹிந்து முஸ்லீம்கள் முன்னேற்றம் அடையும் பொது நலத்திற்காகவே கங்கணம் கட்டி உழைப்பது. நமது சந்ததியார்கள் எதற்காகப் பிறந்தோம் என்பதையுணர்ந்து ஆத்மலாப சுயராச்சியம் அடைவதற்கு வேண்டிய வழிகளை அருமையாகப் போதித்துவருவது.

அநேக வேதாந்த நூற்களின் ஆசிரியர் பெருநாழி ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால் பிரசுரிக்கப்பெற்றுலாவுகின்றது.

வருட சந்தா ரூ. 1—8—0 வெளிதேசங்களுக்கு ரூ. 2—0—0

ஞான சூரியன் ஆபீஸ், விஜயபுரம், திருவாரூர். S. I. Ry.

## சந்தாதாரர்களுக்கு ஓர் லாபம்.

குறிப்பு:—நமது "ஞான சூரியன்" பத்திரிகையின் சந்தாவை 3-வது வருஷமாகிய இரக்தாக்ஷி வருடமுதல் ஒரு ரூபாயாகச் செய்யலாமா? அப்படிச் செய்தால் அதிக சந்தாதாரர்கள் சேர்வார்களா? என்று யூகிக்கப் பெறுகிறது.

மானேஜர்.

காலம் அருமையா!? பணம் அருமையா!?

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய

# வேதாந்த பாஸ்கரன்.

இப்புத்தகத்தின் முதற்பதிப்பானது எதிர்பாராத சொற்ப காலத்திலேயே செலவாகிவிட்டபடியால் இதன் பெருமை நாம் சொல்லாமலே விளங்கும். இப்போது இரண்டாம் பதிப்பு தயாராகி வருகிறது. இது கிரௌன் சைஸில் கண்ணைக் கவரத்தக்க பல ஆப்டோன் அப்பியாசப் படங்களுடன் மழமழப்பான வெள்ளைக் கிளேஸ் காகிதத்தில் முத்துப் போன்ற புதிய எழுத்துக்களால் அச்சிடப்பெற்று நூலாசிரியர் நமது ஞானபூபதி அவர்கள் திருவுருவப் படத்துடன், சீர்மை புல்காலிகோ பைண்டுமுதல் ராப்பர் பைண்டு வரையில் கிடைக்கும். முன்னடியே அதிக ஆர்டர்கள் வந்திருப்பதால் அன்பர்கள் முந்திக்கொள்ளுமாறு எச்சரிக்கை செய்கிறோம்.

விஜயபுரம் "கருணாநிதி" அச்சியந்திரசாலையின் அதிபரும்
ஞான சூரியன் பத்திராதிபருமாகிய பெருநாழி
ஸ்ரீலஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால்
இயற்றி வெளியிடப்பெற்ற

| | ரூ. அ. ப. |
|---|---|
| வேதாந்த பாஸ்கரன் முதற்பதிப்பு ... ... | 1—0—0 |
| யோக ரகசியம் (ஒருபாகம்) ... ... ... | 0—6—0 |
| தோத்திரமஞ்சரி ... ... ... ... | 0—4—0 |
| கந்தப்புகழ் ... ... ... ... ... | 0—2—0 |
| திருப்பாவணி ... ... ... ... ... | 0—2—0 |
| முருகப்புகழ் ... ... ... ... ... | 0—2—0 |
| தெய்வப்புகழ் ... ... ... ... ... | 0—2—0 |
| காவடிக்கதம்பம் ... ... ... ... | 0—2—0 |
| முருகர்தியானம் ... ... ... ... | 0—1—0 |
| காவடிக்காட்சி!... ... .... .... .... | 0—1—0 |
| தெட்சணாமூர்த்தி பத்திரசக்கீர்த்தனை முதற்பாகம் | 0—1—0 |
| ஷை இரண்டாம்பாகம் | 0—1—0 |
| ஷை மூன்றாம்பாகம் | 0—1—0 |

"ஞான சூரியன்" ஆபீஸ்,
விஜயபுரம்—திருவாரூர், S. I. Ry.

இப்பத்திரிகை ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால் தமது விஜயபுரம் கருணாநிதி அச்சியந்திரசாலையில் பதிப்பித்துப் பிரசுரிக்கலாயிற்று.